ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் சங்கீத நாடக அகாடமியின் உயரிய விருதான 'யுவ புரஸ்கார்' தேசிய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் – நடிகர் வாகை சந்திரசேகர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது கழகத் தலைவர் அவர்கள், நடிகர் வாகை சந்திரசேகருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

சென்னை – மயிலாப்பூரில் நடைபெற்ற – திரைப்படத் தயாரிப்பாளர் ஆர்.ரவிந்திரனின் மகள் சௌந்தர்யா – அருண்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

புதிய மசோதாக்களை குறுக்கு வழியில் நிறைவேற்றத் திட்டம்!

மீண்டும் குதிரை பேரத்தைத் தொடங்கிய பா.ஜ.க.!

பல மாநிலங்களில் எம்.பி.க்களை விலைக்கு வாங்கத் திட்டம்!

புதுடெல்லி, ஜூன். 20- நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத்தொடர் நெருங்கும் நிலையில், மீண்டும் குதிரை பேரத்தை பா.ஜ.க. தொடங்கியுள்ளது. உத்தவ் தாக்கரேயின் சிவசேனா கட்சி அதிருப்தி எம்.பி.க்கள் பா.ஜ.க.வில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

5 மாநிலத் தேர்தல் நேரத்தில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில், மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் மறைமுகமாக கொண்டு வரப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா, தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் முயற்சியால் தோற்கடிக்கப்பட்டது. இதனால், பெரும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ள பாஜக, தனது எம்.பி.க்கள் பலத்தை உயர்த்த குதிரை பேரத்தில் இறங்கியுள்ளது. கடந்த ஏப்ரலில் ஆம் ஆத்மி கட்சியில் இருந்த 10 எம்.பி.க்களில் 7 எம்.பி.க்களை குதிரை பேரம் மூலம் பா.ஜ.க.வில் இணைத்தது. இதனை தொடர்ந்து திரிணாமூல் காங்கிரஸ் கட்சியில் 20 எம்.பி.க்கள், அக்கட்சியில் இருந்து விலகி, புதிய கட்சியில் ஐக்கியமாகியுள்ளனர். அவர்களும் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், அடுத்ததாக மகாராஷ்டிராவில் உள்ள உத்தவ் சிவசேனா கட்சி எம்.பி.க்களை வாங்க பாஜக முயற்சித்து வருகிறது. அதன்படி, 9 எம்.பி.க்கள் அக்கட்சியில் உள்ள நிலையில், அதில் 6 முதல் 7 எம்.பி.க்கள் பா.ஜ.க.வின் குதிரை பேரத்திற்கு விலை போயுள்ளதாக கூறப்படுகிறது.

இதேபோல், உத்தரபிரதேசத்திலும் சமாஜ்வாதி கட்சி எம்.பி.க்களை பாஜக தன் பக்கம் இழுக்கவும் முயற்சிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்று புதிய மசோதாக்களை குறுக்கு வழியில் பா.ஜ.க. நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது.

செஞ்சி,மேல்மலையனூரில் வருவாய் தீர்வாயம் தொடக்கம்!

எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

செஞ்சி ஜூன் 20- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி,மேல்மலையனூர் ஆகிய வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி தொடங்கியது.

செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் வளர்மதி தலைமை தாங்கி ஜமாபந்தி நிகழ்ச்சி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணி வேந்தன் கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டுபொதுமக்களின் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்தார்.

வட்டாட்சியர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார்.

குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, பட்டம் மாற்றம் கேட்டு ஏராளமான பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கினர்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன்,சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் ரமேஷ், ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் சாருமதி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அத்தர் ஜான், மண்டல துணை வட்டாட்சியர்ராஜ்குமார், தேர்தல் துணை வட்டாட்சியர் உமா மகேஸ்வரி, வட்ட வழங்கல் அலுவலர் மூர்த்தி

வருவாய் ஆய்வாளர்கள் செஞ்சி ரமேஷ் சங மேல் ஒலக்கூர் கீதா, சத்திய மங்கலம் சத்யா, வல்லம் சுஜாதா தோட்டக்கலை உதவி இயக்குனர் சுகந்தி, கிராம நிர்வாக அலுவலர்கள் வேலு,ராஜா, சரவணன், மணி குமார் கலந்து கொண்டனர்.

ஜமாபந்தி நிகழ்ச்சியில் மேல் ஒலக்கூர் குறு வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனு வழங்கினர்

வரும் 23ம் தேதி வரை ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் அந்த அந்த கிராம மக்கள் தங்களது கோரிக்கைகளை மனுவாக கொடுத்து பயன்பெறலாம் என செஞ்சி வட்டாட்சியர் கார்த்திகேயன்தனது செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி தொடக்கம் :

மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் தீர்வாய அலுவலரும் மாவட்ட கலால் உதவி ஆணையர் ராஜு தலைமை தாங்கி ஜமாபந்தி நிகழ்ச்சி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தரணிவேந்தன்கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

வட்டாட்சியர் வேலு அனைவரையும் வரவேற்றார்.

குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, பட்டா மற்றம் கேட்டு ஏராளமான கோரிக்கை மனு வழங்கினர்.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,வட்டார கல்வி குழு தலைவர்நெடுஞ்செழியன்,சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் கலா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வேல்முருகன்,துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஒன்றிய கவுன்சிலர் யசோதரை சந்திரகுப்தன், தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் சார்லி,வட்ட வழங்கல் அலுவலர் மெகருன்னிசா,வருவாய் ஆய்வாளர்கள் விஜயகுமார் ,சசிகலா, சாமுவேல்கிராம நிர்வாக அலுவலர் காளிதாஸ், சரவணன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஜமாபந்தி நிகழ்ச்சியில் அவலூர்பேட்டை குறுவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனு வழங்கினர்.

வரும் 22ம் தேதி வரை ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் அந்த அந்த கிராம மக்கள் தங்களது கோரிக்கைகளை மனுவாக கொடுத்து பயன்பெறலாம் என வட்டாட்சியர் வேலு தனது செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை – கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்ற (நினைவில் வாழும்) பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களது பேத்தி ஸ்ருதி சாரா சற்குணம் பிலிப் ஆல்பர்ட் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி. முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பி.வில்சன் எம்.பி. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

சென்னை – திருவான்மியூரில் நடைபெற்ற – பி.மனோஜ் பாண்டியன் எம்.எல்.ஏ.வின் சகோதரர் அரவிந்த் பாண்டியனின் மகள் நிதர்ஷனா பாண்டியன் – ரக்ஷன் சார்லஸ் ஜோசப் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடன் உள்ளார்கள்.

க.திருநாவுக்கரசு தலைமை! நக்கீரன் கோபால் நோக்க உரை!

சின்னகுத்தூசி 92ஆவது பிறந்தநாள் - விருது வழங்கல்!

புலவர் செந்தலை கவுதமன் விருதுகள் வழங்கி சிறப்புரை!

வாழ்நாள் சாதனை விருதை கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெறுகிறார்!

சென்னை, ஜூன் 20 - மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி அவர்களின் 92ஆவது பிறந்தநாள் மற்றும் விருது வழங்கும் விழா இன்று (20.6.2026 சனிக்கிழமை) மாலை 6:00 மணியளவில் கவிக்கோ அரங்கம், எண்: 6, 2வது மெயின் ரோடு, சி.ஐ.டி.காலனி (மியூசிக் அகாடமி அருகில்) மயிலாப்பூர், சென்னை 600 004 ல் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சின்னக்குத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் ஆவுடையப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை தலைவர்-திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு தலைமை வகிக்கிறார்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை அறங்காவலர் நக்கீரன் கோபால் நோக்க உரையாற்றுகிறார்.

இவ்விழாவில் விருதுகள் வழங்கி புலவர் செந்தலை கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதை கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெறுகிறார்.

சிறந்த எழுத்தாளர் விருதை கவிக்கோ. துரை. வசந்தராசன், எழுத்தாளர் ஆழி. செந்தில்நாதன், ஊட கவியலாளர் சுகிதா சாரங்கராஜ் ஆகியோர் பெறுகின்றனர்.

சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை செயலாளர் கௌரா ராஜசேகரன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங்கேற்கும்படி சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதயா கருணாகரன் தலைமை! எஸ்.சசிகலா வரவேற்புரை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட

தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் கலைஞர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் - தலைமை கழக பேச்சாளர் கோவை நாகநந்தினி சிறப்புரை!

சென்னை, ஜூன் 20- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் - சாதனைகள் படைத்த சரித்திர நாயகர் கலைஞர் அவர்களின் 103 - வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம்மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் உதயா கருணாகரன் தலைமையில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.சசிகலா வரவேற்புரையில் 22.06.2026 அன்று திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு G.S.T சாலை, நந்திவரம்-கூடுவாஞ்சேரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகர கழக செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி, மாவட்ட மகளிர் அணியினர் கே.சி.சந்தியா த.மலர்விழி சி.எம்.கலைவாணி பி.விஜயலட்சுமி, பி. வளர்மதி, வெ.பாண்டிச்செல்வி, வி.சரளா, எஸ்.தமிழரசி, எஸ்.சத்தியா, மாவட்ட மகளிர் தொண்டர் அணியினர் ஞா.லட்சுமி க.சாந்தி எம்.கலாவதி ம.கல்யாணி எஸ்.சந்தியா விஜயலட்சுமி ஜி.வெற்றிச்செல்வி த.செண்பகவள்ளி எஸ்.நளினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கோவை நாகநந்தினி, மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், க.செல்வம் எம்.பி., தாம்பரம் மாநகர் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட துணைச்செயலாளர் து.மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், மேயர் க.வசந்தகுமார், துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.இதயவர்மன், ஆலந்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்பு செழியன், க.அன்பு செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்பு செழியன், ஆதிமாறன், தலைவர் (பொ) - நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஜி.கே.லோகநாதன், தலைமை பொதுகுழு உறுப்பினர்கள் ஜிஜேந்திரன் ராமு, செ.அருள் தேவி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி.ஜி. செல்வராஜ் இரா.பொன்னுராம் அ.தமிழ்மாறன் என்.நவீன் சாய்ஜெய காந்த் பாரதி ஆர்.எஸ். கிருத்திகா தேவி சி.பிரதீப் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி ந.கோபால் பயலூர் எம். சேகர் ஏ.வந்தேமாதரம் பி.சந்தானம் ஜி.கே.விவேகானந்தன் ரவி எம்.டி. லோகநாதன் கே.பி.ராஜன் இ.மணி நகர கழக செயலாளர்கள்: எஸ்.நரேந்திரன் டி.பாபு எஸ்.ஐபருல்லா கோ.சத்திய மூர்த்தி ஜெ.சண்முகம் எம்.கே.டி. கார்த்திக் ஆர்.சதீஷ்குமார் த.வினோத் குமார் பகுதி கழக செயலாளர்கள்: என். சந்திரன் ப. குணாளன் வே. கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை த.ஜெயக்குமார் எஸ்.சேகர் எஸ்.இந்திரன் டி.காமராஜ் ஆ.நடராஜன் ஏ.கே.கருணாகரன் இ.எஸ்.பெர்னாட் ஆர். சுரேஷ் பொதுக்குழு உறுப்பினர்கள்: எம்.எஸ்.கே. இப்ராகிம் ஆர்.டி.பூபாலன் எம்.ஆர்.சீனிவாசன் ஆர்.எஸ்.சங்கர் க.தேவேந்திரன் எஸ்.சதீஷ் கே.எத்திராஜ் எம்.செல்வகுமார் மா.கணேஷ்பாபு இரா. பாஸ்கரன் மு.ரஞ்சன் எம். கஜா கஜேந்திரன் சி.வி. என்.குமாரசுவாமி துரை. சண்முக மணிகண்டன் மனோகரி சண்முகமணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் நகர மகளிர் அணி அமைப்பாளர் நந்திவரம் கூடுவாஞ்சேரி எம். ஹேமலதா, நகர மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், நந்திவரம்-கூடுவாஞ்சேரி ரம்யா தினேஷ் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பெட்ரோல் குண்டு வீச்சு வழக்கில் பிடிக்க முயன்றபோது

எஸ்.ஐ.யை அரிவாளால் வெட்டிய குற்றவாளிகள்!

தூத்துக்குடி, ஜூன். 20- பெட்ரோல் குண்டு வீச்சு வழக்கில் பிடிக்க முயன்றபோது எஸ்ஐயை அரிவாளால் வெட்டிய ரவுடி மற்றும் இளஞ்சிறாரை தூத்துக்குடி போலீசார் கைது செய்தனர். இதில் போலீசிடமிருந்து தப்பிச் செல்ல முயன்ற ரவுடியின் கால் எலும்பு முறிந்தது, இளஞ்சிறாரின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடி சிலுவைப்பட்டியைச் சேர்ந்த முருகேசன் மகன் கார்த்திக் என்ற நண்டு (22). இவருடைய நண்பர் 17 வயது இளஞ்சிறார். இருவர் மீதும் தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசிய சம்பவத்தில் இருவரும் தேடப்பட்டு வந்தனர். இந்நிலையில் இருவரும் வடபாகம் எல்லைக்குட்பட்ட அம்பேத்கர் நகரில் பதுங்கி இருப்பதாக தாளமுத்துநகர் போலீசாருக்கு நேற்று ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து எஸ்ஐ மாணிக்கராஜ் (38), ஏட்டுகள் மீனாட்சிசுந்தரம் (34), சையது ஈசாக் ஆகியோர் அங்கு தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது மறைவிடத்தில் பதுங்கி இருந்த இருவரும் போலீசை கண்டதும் தப்பி ஓட முயன்றனர். போலீசார் இருவரையும் மடக்கி பிடிக்க முயன்றபோது, மறைத்து வைத்திருந்த அரிவாள் மற்றும் வாளால் வெட்டியுள்ளனர்.

இதில் எஸ்ஐ மாணிக்கராஜுக்கு 2 இடத்தில் வெட்டுக் காயம் ஏற்பட்டது. மேலும் ஏட்டுக்கள் மீனாட்சிசுந்தரம், சையது ஈசாக்கை கீழே தள்ளி விட்டு தப்பிச் சென்றனர். போலீசார் அவர்களை விரட்டி பிடிக்க முயன்றனர். இருவரும் சாலையோர பாலத்தில் இருந்து கீழே குதித்தபோது கார்த்திக்கின் வலது கால் எலும்பு உடைந்தது. இளஞ்சிறாரின் இடது கை ஒடிந்தது. இதையடுத்து போலீசார் அவர்களை மடக்கிப் பிடித்தனர். பின்னர் போலீசார் 5 பிரிவுகளில் வழக்கு பதிந்து கார்த்திக் என்ற நண்டு, 17 வயது இளஞ்சிறாரை கைது செய்தனர். இருவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, பின்னர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.